©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 15.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 198A] சென்னை, வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 2, 2016
ஆவணி 17, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2047

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

சட்டமுன்வடிவுகள்:

எண் 15/2016—தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் .. .. .. .. 2

எண் 16/2016—தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலை கழகத் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 3–8

எண் 17/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டம் .. .. .. 9–16

எண் 18/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டம் .. .. .. 17–20

எண் 19/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டம் .. .. .. 21–24

எண் 20/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 5) சட்டம் .. .. .. 25–26

எண் 21/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 6) சட்டம் .. .. .. 27–28

எண் 22/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 7) சட்டம் .. .. .. 29–32

எண் 23/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 8) சட்டம் .. .. .. 33–36

எண் 24/2016—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 9) சட்டம் .. .. .. 37–38

2016—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2016.**

**2003—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பு.**

1. இந்தச் சட்டம், 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

**தமிழ்நாடு சட்டம் 16/2003.** **4—ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 2003—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4—ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,

(a) எனும் கூறில், ''2016—ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31—ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் குறைத்து வந்து 2016—2017 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2019—ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31—ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் குறைத்து வந்து 2019—2020 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

வருவாய்ப் பற்றாக்குறையை நீக்குவதற்கான கால அளவை நீட்டிப்பு செய்வதன் பொருட்டு, நிர்ணயிக்கப்பட்ட நிதி மேலாண்மை இலக்குகளைப் பராமரித்து, ஒட்டு மொத்த நோக்கங்களை அடைவதற்காக, 2003—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினைத் (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்வதென கருதப்பட்டுள்ளது.

2. இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்கவிழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*நிதி, பணியாளர் மற்றும்*
*நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2016.**

**2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலை கழகத் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) மாநில அரசால், அறிவிக்கையினால் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11 ஆம் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 30/2013

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என்று குறிப்பிடப்-படுவதான) 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில் உட்பிரிவு (2) இல் "அரசின் நியமனம் செய்யப் பெற்றவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "வேந்தரின் நியமனம் செய்யப் பெற்றவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

13 ஆம் பிரிவின் திருத்தம்

3. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் (a)கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது

"(a) பதிவாளர் என்னும் பதவியிலிருப்பவர் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவரின் தகுதிக்குக் குறையாமல் இருக்கின்ற நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கிடைக்கப் பெறாமல் இருக்கிறதென்றால் அதன் பின்பு பல்கலைக் கழகத்தின் அல்லது கல்லூரியின் இணைப் பேராசிரியராக இருப்பவர் அல்லது அரசு துணைச் செயலாளர் பதவியின் தரத்திற்குக் குறையாத அரசின் அலுவலறொருவர் பதிவாளராக பதவியமர்த்தம் செய்யப்படலாம்''.

19 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4.முதன்மைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் "பிரிவு II–பிற உறுப்பினர்கள்" என்கின்ற தலைப்பின் கீழ் (d) இனத்திற்குப் பிறகு பின்வரும் இனம் சேர்க்கப்படுதல் வேண்டும்,

அதாவது:-

"(e) இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தவிர பிற இணைக்கப்பட்டக் கல்லூரிகளுக்குள்ளிருந்து துணை வேந்தரால் இரண்டு முதல்வர்கள் நியமனம் செய்யப்படுவர்".

5. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் "பிரிவு-I – பதவி வழி உறுப்பினர்கள்" என்கின்ற தலைப்பின் கீழ் (g) இனத்திற்குப் பின்பு பின்வரும் இனம் சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:- 22 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(h) திருச்சிராப்பள்ளியிலுள்ள கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரியின் முதல்வர்"

6. முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில்;- 55 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:-

"(1). (2) முதல் (6) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, இதன் பின்பு இந்தப் பிரிவில் பல்கலைக் கழகச் சட்டங்கள் என சுட்டப்படுவதான 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் VII/1923) 1965 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1965) மற்றும் 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982) அன்று மற்றும் குறித்திட்ட தேதியிலிருந்து

செல்திறத்துடன் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக பொருந்துவது அற்றுப் போகும்.

விளக்கம்:- (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக "குறித்திட்ட நாள்" என்பது, -

(a) இணைப்புப் பட்டியலின் பகுதி – I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக இயன்ற அளவிற்கு குறித்திட்ட தேதி என்பது 1 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி உள்ளதாக இருக்கும்;

(b) இணைப்புப் பட்டியலின் பகுதி –II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக இயன்ற அளவிற்கு 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியானது இருக்கும்";

(2) (4) ஆம் உட்பிரிவில் ஆறு இடங்களில் வரும் "சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "சென்னைப் பல்லைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகம்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (5) ஆம் உட்பிரிவில் இரண்டு இடங்களில் வரும் "சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை

காமராசர் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம்"

என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

7. முதன்மைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

57 ஆம் பிரிவிற்கான நீக்கம்.

8. இணைப்புப் பட்டியலுக்காக பின்வரும் இணைப்புப் பட்டியல் அமைக்கப்படுதல் வேண்டும்:-

இணைப்புப் பட்டியலின் மாற்றாக்கம்.

## இணைப்புப் பட்டியல்

(1 (3), 6 மற்றும் 55 ஆம் பிரிவுகளைக் காண்க)

### பகுதி-1

1. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, சென்னை.
2. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை.
3. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு.
4. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, கோயம்புத்தூர்.
5. அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை.
6. அரசு கவின் கலைக்கல்லூரி, கும்பகோணம்.
7. அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்.
8. கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

### பகுதி –II

1. தமிழ் இசைக்கல்லூரி, இராஜா அண்ணாமலைமன்றம், சென்னை.
2. சத்குரு சங்கீத வித்யாலயம், மதுரை.

## நோக்கக் –காரண விளக்கவுரை

தமிழ்நாடு மாநிலத்தில் இசையையும் கவின் கலையையும் வளர்ப்பதற்காக, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தை அமைக்கும் பொருட்டு **2013** ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **30/2013**) இயற்றப்பட்டது. தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளுக்கு அந்த பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவிலும் கல்வி அலுவல்குழுவிலும் சார்பாற்றம் கொடுக்கும் பொருட்டும் பிற பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றுள்ள இரண்டு கல்லூரிகளை தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றும் பொருட்டும், மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் **30/2013** என்ற சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு கருதப்பட்டிருக்கிறது. அதன்படி, மேற்சொன்ன நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சேவூர் S. இராமச்சந்திரன்,**
*இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2016.

**2016–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டம் என வழங்கப்பெறும்.

2016–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்

தமிழ்நாடு சட்டம் 7/2016.

2. மாநில அரசு, 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டத்தின் 2–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து தொண்ணூற்று நான்கு கோடியே ஏழு இலட்சத்து ஓராயிரம் ரூபாய் தொகையை உள்ளடக்குகின்றதும், 2016–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுவதுமான ஓர் இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தெட்டு கோடியே பத்தொன்பது இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்

(2–ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | வருவாய் | 43,59,67,000 | *37,84,000* | 43,97,51,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 33,06,55,000 | *10,55,50,000* | 43,62,05,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 719,21,83,000 | *185,45,51,000* | 904,67,34,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 2,701,91,96,000 | *8,00,03,000* | 2,709,91,99,000 |
| | | மூலதனம் | 261,13,09,000 | ... | 261,13,09,000 |
| | | கடன் | 14,25,000 | ... | 14,25,000 |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 6,434,20,72,000 | *4,000* | 6,434,20,76,000 |
| | | மூலதனம் | 356,55,68,000 | ... | 356,55,68,000 |
| | | கடன் | 150,50,00,000 | ... | 150,50,00,000 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 1,095,18,60,000 | *3,000* | 1,095,18,63,000 |
| | | மூலதனம் | 93,78,03,000 | ... | 93,78,03,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 429,56,78,000 | *1,000* | 429,56,79,000 |
| | | மூலதனம் | 314,22,12,000 | ... | 314,22,12,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 53,68,55,000 | *1,000* | 53,68,56,000 |
| | | மூலதனம் | 68,00,01,000 | ... | 68,00,01,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 940,65,97,000 | *1,24,09,000* | 941,90,06,000 |
| | | மூலதனம் | 105,74,77,000 | ... | 105,74,77,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 324,58,12,000 | *2,000* | 324,58,14,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 305,91,58,000 | *1,000* | 305,91,59,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 2,279,82,40,000 | *3,000* | 2,279,82,43,000 |
| | | மூலதனம் | 114,50,43,000 | ... | 114,50,43,000 |
| | | கடன் | 12,62,08,000 | ... | 12,62,08,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 5,714,00,41,000 | *4,000* | 5,714,00,45,000 |
| | | மூலதனம் | 501,68,04,000 | ... | 501,68,04,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 7,201,34,04,000 | *1,000* | 7,201,34,05,000 |
| | | மூலதனம் | 565,00,00,000 | ... | 565,00,00,000 |
| | | கடன் | 1,483,00,05,000 | ... | 1,483,00,05,000 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 11,85,29,000 | *1,000* | 11,85,30,000 |
| | | மூலதனம் | 15,00,01,000 | ... | 15,00,01,000 |
| | | கடன் | 20,00,01,000 | ... | 20,00,01,000 |
| 16 | நிதித் துறை | வருவாய் | 1,014,40,86,000 | *5,000* | 1,014,40,91,000 |
| | | மூலதனம் | 2,003,60,00,000 | ... | 2,003,60,00,000 |
| | | கடன் | 109,47,23,000 | ... | 109,47,23,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 1,090,77,66,000 | *1,000* | 1,090,77,67,000 |
| | | மூலதனம் | 1,00,01,000 | ... | 1,00,01,000 |
| | | கடன் | 37,96,06,000 | ... | 37,96,06,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 174,26,76,000 | *2,000* | 174,26,78,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 8,952,89,42,000 | *96,32,000* | 8,953,85,74,000 |
| | | மூலதனம் | 118,86,49,000 | ... | 118,86,49,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 3,535,87,23,000 | *8,000* | 3,535,87,31,000 |
| | | மூலதனம் | 142,89,90,000 | *23,67,000* | 143,13,57,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,374,81,46,000 | *2,86,000* | 1,374,84,32,000 |
| | | மூலதனம் | 7,111,84,70,000 | *6,86,000* | 7,111,91,56,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 22 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 5,699,44,19,000 | *2,20,10,000* | 5,701,64,29,000 |
| | | மூலதனம் | 381,15,03,000 | ... | 381,15,03,000 |
| | | கடன் | 20,15,75,000 | ... | 20,15,75,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 227,00,34,000 | *1,000* | 227,00,35,000 |
| | | மூலதனம் | 2,12,77,000 | ... | 2,12,77,000 |
| | | கடன் | 93,83,000 | ... | 93,83,000 |
| 24 | சிறைச்சாலைகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 250,58,99,000 | *2,29,000* | 250,61,28,000 |
| | | மூலதனம் | 32,30,27,000 | ... | 32,30,27,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 233,88,09,000 | *1,000* | 233,88,10,000 |
| | | மூலதனம் | 5,00,000 | ... | 5,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 1,204,10,36,000 | *2,000* | 1,204,10,38,000 |
| | | மூலதனம் | 617,36,89,000 | ... | 617,36,89,000 |
| | | கடன் | 636,00,01,000 | ... | 636,00,01,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 1,656,21,59,000 | *4,000* | 1,656,21,63,000 |
| | | மூலதனம் | 49,22,22,000 | ... | 49,22,22,000 |
| | | கடன் | 399,05,09,000 | ... | 399,05,09,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 67,37,52,000 | *1,000* | 67,37,53,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 99,38,25,000 | *7,000* | 99,38,32,000 |
| | | மூலதனம் | 70,52,75,000 | ... | 70,52,75,000 |
| | | கடன் | 34,98,000 | ... | 34,98,000 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 96,40,42,000 | *24,22,000* | 96,64,64,000 |
| | | மூலதனம் | 4,58,000 | ... | 4,58,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 135,28,88,000 | *1,000* | 135,28,89,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 963,64,88,000 | *7,000* | 963,64,95,000 |
| | | மூலதனம் | 16,46,85,000 | ... | 16,46,85,000 |
| | | கடன் | 25,00,000 | ... | 25,00,000 |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 28,43,77,000 | *1,000* | 28,43,78,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 6,953,95,79,000 | *3,000* | 6,953,95,82,000 |
| | | மூலதனம் | 4,590,12,58,000 | ... | 4,590,12,58,000 |
| | | கடன் | 275,93,62,000 | ... | 275,93,62,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 92,92,76,000 | *60,93,42,000* | 153,86,18,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 37,50,000 | ... | 37,50,000 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 253,44,39,000 | *4,000* | 253,44,43,000 |
| | | மூலதனம் | 174,64,02,000 | ... | 174,64,02,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 106,31,11,000 | *1,000* | 106,31,12,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 593,28,68,000 | *1,41,06,000* | 594,69,74,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | 20,50,00,000 | ... | 20,50,00,000 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 242,32,03,000 | *6,000* | 242,32,09,000 |
| | | மூலதனம் | 777,80,30,000 | ... | 777,80,30,000 |
| | | கடன் | 8,01,000 | ... | 8,01,000 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 1,727,00,73,000 | *4,000* | 1,727,00,77,000 |
| | | மூலதனம் | 1,677,49,02,000 | *2,19,01,000* | 1,679,68,03,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 5,596,96,70,000 | *13,000* | 5,596,96,83,000 |
| | | மூலதனம் | 75,56,38,000 | *13,58,80,000* | 89,15,18,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 20,276,57,65,000 | *5,000* | 20,276,57,70,000 |
| | | மூலதனம் | 910,00,06,000 | ... | 910,00,06,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 23,271,40,17,000 | *44,82,000* | 23,271,84,99,000 |
| | | மூலதனம் | 857,85,39,000 | ... | 857,85,39,000 |
| | | கடன் | 15,40,000 | ... | 15,40,000 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 297,79,76,000 | *1,000* | 297,79,77,000 |
| | | மூலதனம் | 50,42,56,000 | ... | 50,42,56,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) (ரூ.) | *(4) (ரூ.)* | (5) (ரூ.) |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 4,512,31,78,000 | *1,000* | 4,512,31,79,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 32,93,56,000 | *6,000* | 32,93,62,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 80,86,99,000 | *3,00,00,000* | 83,86,99,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 816,77,34,000 | *3,000* | 816,77,37,000 |
| | | மூலதனம் | 353,30,81,000 | ... | 353,30,81,000 |
| | | கடன் | 125,00,02,000 | ... | 125,00,02,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 150,95,40,000 | *1,000* | 150,95,41,000 |
| | | மூலதனம் | 2,43,30,000 | ... | 2,43,30,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 20,914,56,18,000 | *4,11,93,000* | 20,918,68,11,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 1,079,52,75,000 | *2,000* | 1,079,52,77,000 |
| | | மூலதனம் | ... | ... | .. |
| | | கடன் | ... | ... | ... |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 396,48,35,000 | *2,000* | 396,48,37,000 |
| | | மூலதனம் | 13,75,000 | ... | 13,75,000 |
| | | கடன் | 11,77,000 | ... | 11,77,000 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 1,805,08,47,000 | *1,000* | 1,805,08,48,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 485,31,22,000 | *2,000* | 485,31,24,000 |
| | | மூலதனம் | 120,61,33,000 | ... | 120,61,33,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *20,835,17,05,000* | 20,835,17,05,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரி–க்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| | பொதுக் கடன் – திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *8,191,58,23,000* | 8,191,58,23,000 |
| | மொத்தம் | வருவாய் | 144,780,24,95,000 | *21,114,18,21,000* | 165,894,43,16,000 |
| | | மூலதனம் | 22,533,49,23,000 | *16,08,34,000* | 22,549,57,57,000 |
| | | கடன் | 3,292,60,86,000 | *8,191,58,23,000* | 11,484,19,09,000 |
| | | பெருமொத்தம் | 170,606,35,04,000 | *29,321,84,78,000* | *199,928,19,82,000* |

## நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2016–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின் மீது *சாட்டப்பட்ட* செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகைகளை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*நிதி, பணியாளர் மற்றும்*
*நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2016.**

**2006–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்கு குறித்த சில பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தொகைக்கும் மிகையாக அந்த ஆண்டின்போது அந்தப் பணிகளுக்கும் நோக்கங்களுக்கும் செலவழிக்கப்பட்ட தொகையினை எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகையை ஒதுக்குவதற்கு அதிகாரமளிப்பதற்காக வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாவது ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

2. 2006–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்கு, இணைப்புப் பட்டியலில் (2)–ஆம் கலப்பத்தியில் குறித்துரைக்கப்பட்ட பணிகளையும், நோக்கங்களையும் பொறுத்த அளவில் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தொகைகளுக்கும் மிகையாக, அந்த ஆண்டின்போது அந்தப் பணிகளையும் நோக்கங்களையும், பொறுத்த செலவினங்களைச் செய்வதற்கு செலவிடப்பட்ட தொகையினை எதிர்கொள்வதற்காக, இணைப்புப் பட்டியலின் (5)–ஆம் கலப்பத்தியில் குறித்துரைக்கப்பட்ட தொகையான எட்டு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எழுபத்தோராயிரத்து அறுநூறு ரூபாயை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து வழங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். 2006–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து 8,99,71,600 ரூபாயை வழங்குதல்.

3. 2–ஆம் பிரிவின்படி மாநிலத் தொகுநிதியத்திலிருந்து வழங்கப்படுவதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் தொகையானது 2006–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பாக, இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கம்.

## இணைப்புப் பட்டியல்.

(2–ஆம் மற்றும் 3–ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 31,64,882 | ... | 31,64,882 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம் | வருவாய் | 4,64,292 | ... | 4,64,292 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,11,350 | ... | 1,11,350 |
| 21 | உள் துறை – காவல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 8,99,182 | ... | 8,99,182 |
| 22 | உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | வருவாய் | ... | 8,899 | 8,899 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | உள் துறை – சிறைச்சாலைகள் | வருவாய் | ... | 13,849 | 13,849 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | பொதுத் துறை | வருவாய் | ... | 8,00,638 | 8,00,638 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுப்பணித் துறை | வருவாய் | 5,47,61,580 | ... | 5,47,61,580 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 46 | போக்குவரத்துத் துறை | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 2,84,63,722 | ... | 2,84,63,722 |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | ... | 12,83,206 | 12,83,206 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | **மொத்தம்** | வருவாய் | 5,52,25,872 | 21,06,592 | 5,73,32,464 |
| | | மூலதனம் | 3,16,28,604 | ... | 3,16,28,604 |
| | | கடன் | 10,10,532 | ... | 10,10,532 |
| | **பெருமொத்தம்** | | 8,78,65,008 | 21,06,592 | 8,99,71,600 |

## நோக்க—காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது –

(a) 2005-2006ஆம் நிதியாண்டின் போது குறித்த சில பணிகளுக்கும் நோக்கங்களுக்கும் செலவிடப்பட்ட தொகையை உள்ளடக்கும் பொருட்டு, அந்தப் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மற்றும் அந்த ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்கு மிகையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்,

(b) அந்த ஆண்டின்போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து கொடுக்கப்படுவதற்கு சாட்டப்பட்ட செலவினத்திற்கு மிகையாக அந்தப் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகையையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின் (b) எனும் உட்கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*நிதி, பணியாளர் மற்றும்*
*நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2016.**

**2007–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளில் முடிவடைந்த நிதியாண்டிற்கு குறித்த சில பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தொகைக்கும் மிகையாக அந்த ஆண்டின்போது அந்தப் பணிகளுக்கும் நோக்கங்களுக்கும் செலவழிக்கப்பட்ட தொகையினை எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகையை ஒதுக்குவதற்கு அதிகாரமளிப்பதற்காக வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாவது ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.4) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

